# 2024 – ல் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**வித்யாதன் பற்றி:**

வித்யாதன் கல்வி உதவித்தொகை சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மாணவர்களுக்கு சரோஜினி தாமோதரன் அறக்கட்டைளையின் மூலமாக கொடுக்கப்படுகிறது. பத்தாம் வகுப்பு முடித்த மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெற திறனாய்வு தேர்வுக்கு உட்படுத்தபடுவார்கள். தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு உதவித்தொகை பெற தகுதியுடையவர்கள். உதவித்தொகை பெறும் மாணவர்கள் வரும் கல்வியாண்டில் நல்ல மதிப்பெண் பெற்றால் அடுத்து அவர்கள் விரும்பும் மேற்படிப்புக்கும் உதவப்படும். **கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, மஹாராஷ்டிரா, குஜராத், கோவா, ஒடிசா, புது டெல்லி, லடாக், பீகார், உத்தர பிரதேசம், ஹிமாச்சல் பிரதேசம், பஞ்சாப் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் தற்போது 7700க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். புதுச்சேரி வித்யாதன் 2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது, தற்போது 680 மாணவர்கள் தங்களுடைய படிப்பை மேற்க்கொண்டும் மற்றும் பல்வேறு நிருவனங்களிலும் பணிபுரிந்து வருகின்றனர்.** இந்த உதவித்தொகை அறக்கட்டைளையின் மூலமாகவும் வெளிப்புற ஆதரவாளர்கள் மூலமாகவும் கொடுக்கப்படுகிறது. கல்வி உதவித்தொகை 10,000 முதல் 75,000 வரை மாநிலம், படிப்பு மற்றும் படிக்கும் காலத்திற்கு தகுந்தாற் போல் வேறுபடும். தேர்ந்தெடுக்கபட்ட மாணவர்கள் வித்யாதன் நடத்தும் நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

**புதுச்சேரி 11 ஆம் வகுப்பு கல்வி உதவித்தொகை - 2024**

**கல்வி உதவித்தொகையின் அளவு:**

11 வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு அதிகபட்சமாக வருடத்திற்கு ரூ. 10,000/- வழங்கப்படும்.

**விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்:**

வித்யாதன் கல்வி உதவிதொகை பெற மாணவர்களின் குடும்ப வருமானம் ஆண்டிற்கு 2 லட்சத்திற்கு குறைவாக இருக்க வேண்டும். புதுச்சேரி 2023-24 ஆம் வருட கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு தேர்வில் 80 சதவீத விழுக்காடு மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். (ஊனமுற்ற மாணவர்களுக்கு 60 சதவீதம் மதிப்பெண்கள் தேவை).

**தேர்ந்தெடுக்கும் முறை:**

மாணவர்களின் விண்ணப்பங்கள் மதிபெண்கள் மற்றும் கொடுக்கபட்ட விவரங்களின்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்தெடுக்கப்பட்ட மாணவர்கள் திறனாய்வு தேர்வு குழு கலந்துரையாடல் மற்றும் நேர்முகத்தேர்வுக்கு Online மூலம் அழைக்கப்படுவார்கள். மாணவர்களின் விவரம் மற்றும் நேர்முகத்தேர்வின் அறிவிப்புகள் தேர்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.

The Shibulal Family Philanthropic Initiatives

Vidyadhan
Transforming lives through education
A Shibulal Family Philanthropic Initiative

**<u>முக்கிய தேதிகள்:</u>**

**ஜூலை 15, 2024** - விண்ணப்பிக்க கடைசி தேதி

தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி மூலம் ஹால் டிக்கெட் பதிவிறக்கம் செய்ய அறிவுருத்தப்படும் (தேதி மற்றும் ஏனைய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்).

**தேர்வு குழு கலந்துரையாடல் மற்றும் நேர்முகத்தேர்வுகள் Online மூலம் ஆரம்பமாகும் (தேதி மற்றும் ஏனைய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்).**

**<u>தேவையான ஆவணங்கள்:</u>**

கீழ்க்காணும் நகல் எடுக்கப்ட்ட ஆவணங்களின் விவரங்கள்:

1. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
2. வருமான சான்றிதழ் தகுதியுடைய அதிகாரியின் கையொப்பத்துடன்.
3. புகைப்படம்

**<u>தொடர்புக்கு:</u>**

எவ்வித விவரங்களுக்கு vidyadhan.puducherry@sdfoundationindia.com என்ற மின்னஞ்சல் முகவரியை தொடர்பு கொள்ளவும். அல்லது **+91 9663517131** என்ற எண்களை தொடர்பு கொள்ளவும்.

**<u>விண்ணப்பிக்கும் முறை:</u>**

1. நீங்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்க தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி இருக்க வேண்டும். இல்லையென்றால் www.gmail.com அல்லது வேறு மின்னஞ்சல் வழங்கும் இணையதளத்தில் ஒரு கணக்கை திறக்கவும்.
2. எதிர்கால பயன்பாட்டிற்காக மின்னஞ்சல் முகவரி மட்டும் கடவுச்சொல்லை நினைவில் கொள்ள வேண்டும்.
3. வித்யாதன் இணையதளத்தில் புதிய கணக்கை உருவாக்கும் போது கீழ்க்காணும் விவரங்ககளை மறவாமல் பின்பற்றவும்.
   1) First Name: கல்வி சான்றிதழில் உள்ளபடி முதல் பெயரை பதிவு செய்யவும்.
   2) Last Name: கல்வி சான்றிதழில் உள்ளபடி கடைசி பெயரை பதிவு செய்யவும்.
   3) Email ID: உங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யவும். மின்னஞ்சல் முகவரியை நினைவில் கொள்க எதிர்கால பயன்பாட்டிற்காக தயவுசெய்து Internet cafe/நண்பர்களின் மின்னஞ்சல் முகவரியை பாதுகாப்பு காரணங்களுக்காக பயன்படுத்த வேண்டாம்.
   4) Vidyadhan Password: மேற்குறிப்பிட்ட கணக்கிற்கு குறைந்தபட்சமாக 8 இலக்கங்களில் கடவுச்சொல்லை உருவாக்கவும். கடவுச்சொல்லை மறந்து விட வேண்டாம்.
4. "Apply Now" பொத்தானை அழுத்தவும். அழுத்தியவுடன் கணக்கை செயல்படுத்தும் இணைப்பு உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

5. மின்னஞ்சலை திறந்து உங்கள் கணக்கை செயல்படுத்தும் மின்னஞ்சல் கிளிக் செய்யவும். கிளிக் செய்தவுடன் “Account is activated” என்ற செய்தியுடன் வித்யாதன் இணையதளத்திற்கு செல்லும்.
6. இப்பொழுது உங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் வித்யாதன் கடவுச்சொல்லை கொண்டு உங்களது கணக்கை துவக்கவும்.
7. கணக்கை தொடங்கிய பிறகு “Help” என்ற லிங்கை கிளிக் செய்து விண்ணப்பிக்கும் முறை மற்றும் நடைமுறையில் உள்ள உதவித்தொகைகளின் விவரங்களை தெரிந்து கொள்ளாலம்.
8. இப்பொழுது “Apply Now” என்ற லிங்கை கிளிக் செய்து நடைமுறையில் உள்ள வித்யாதன் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம்.
9. விண்ணப்பங்களை நிரப்பிய பிறகு அதை திருத்தம் செய்யலாம்.
10. தயவுசெய்து உங்களின் மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி செய்திகளை தொடர்ந்து கவனிக்கவும். ஏனென்றால் அனைத்து வித்யாதன் செய்திகள் மற்றும் உரையாடல்கள் உங்கள் மின்னஞ்சல் மற்றும் தொலைபேசிகளுக்கு அனுப்பப்படும்.